Registered as a Newspaper in Sri Lanka No. A 15

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர்: 30

இதழ்: 9

வைகாசி

1975

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- மீன்பிடித் தொழில் சந்தை அபிவிருத்தி

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

சுடர் 30 ‖ யாழ்ப்பாணம், வைகாசி 1975 ‖ இதழ் 9

## மரம் நாட்டு இயக்கமும் கூட்டுறவு இயக்கமும்

ஆங்கிலக் கவிஞன் ஒருவன் இறைவனே மரங்களைப் படைக்க வல்லவன் என்று பாடினான்.

பண்டைக்காலத்திலே இறைவன் மட்டுமல்ல, மனிதனும் தாவர வர்க்கங்களை உண்டு பண்ண வல்லவன் என்பதை எமது மூதாதையர் நன்கு உணர்ந்திருந்தனர். இதனாற்றான் மரம் நாட்டுவிழாக்களை அவர்கள் நடாத்தி வந்தனர்.

அன்று எமது மூதாதையருக்குத் தெரிந்திருந்த உண்மை இன்று எமது விஞ்ஞானிகளுக்கும் தெரியவந்துள்ளது.

மனிதனுக்கும் இயற்கைச் சூழலுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பை விஞ்ஞானிகள் இப்பொழுது ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளனர்.

பண்டைக்காலத்திலே மனித சமுதாயத்திற்கும், இயற்கைச் சூழலுக்குமிடையே உள்ள நெருக்கமான உறவு நன்கு உணரப்பட்டிருந்தது. இன்று கைத்தொழில்களின் வளர்ச்சியினால் இயற்கைச் சூழல் மாசு படுத்தப்படுகின்றன என்பதை விஞ்ஞானிகளே சுட்டிக்காட்டுகின்றனர். இதன் விளைவாக மனிதர் மட்டுமல்ல, விலங்கினங்களும் பறவைகளும் நீர்வாழ் பிராணிகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாக சுவீடன் போன்ற நாடுகளிலே டி. டி. ரி. போன்ற பூச்சி கொல்லிகளின் பாவிப்பு விலக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் நாம் குறிப்பிடுவது வெறும் வரலாற்று நோக்கத்தோடு மட்டுமன்று இன்றைய உலகிலே மனிதனும் இயற்கைச் சூழலும் எவ்வாறு சுமுகமாக வாழமுடியும் என்பதனை உணர்த்தவே இவற்றினைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அண்மையில்— வெசாக் தினத்தில் — தெற்கிலே சிரமதான இயக்கம் மூலம் மரம் நாட்டு இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதை பலர் அறிந்திருப்பர்.

சரப்பலாக்காய், பலா, மா போன்ற பயன்தரு மரங்களின் விதைகளை நாட்டுவதற்கான முயற்சிகளை இவ்வியக்கம் மேற்

கொண்டது வடகிழக்குப் பகுதிகளிலே இத்தகைய இயக்கம் ஒழுங்கு முறையாக இயங்கி வருகின்றதாக எமக்குத் தெரியவில்லை.

எமது மூதாதையர் விழாக்களைக் கொண்டாடும் போது மரம் நாட்டு இயக்கத்தினையும் அதனுடைய ஒரு பகுதியாகக் கொண்டாடினர். இதன்மூலம் தமக்கும் இயற்கைச் சூழலுக்குமிடையே இருந்த இயல்பான உறவை அவர்கள் சொல்லாமலே சொன்னார்கள்.

இன்று எமது நாட்டிலே உணவுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் கூடிய கவனம் உணவுத் தானியங்களிலே செலுத்தப்பட்டிருப்பது நியாயமே. அதாவது நெல், குரக்கன், வரகு, தினை முதலியவற்றைப் பயிரிடுவதில் விவசாயிகளின் முழுக் கவனமும் இதுவரை காலமும் செலுத்தப்பட்டிருப்பது தவிர்க்கமுடியாதது. இது நாட்டிற்கும் பொருளாதாரத்திற்கும் நன்மையளித்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

இதுவரை காலமும் நாம் உணவுப் பயிர்களிலும், உப உணவுப் பயிர்களிலுமே கூடுதலாகக் கவனம் செலுத்தி வந்திருக்கின்றோம். இனிமேல் அவற்றுடன் பயன்தரும் வேறு மரங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எடுத்துக்காட்டாக பனை மரங்களை தாறுமாறாகத் தறிப்பதைத் தடுப்பதற்கு சட்டம் இருந்த போதிலும் இம்மரங்கள் எமது கண்முன்னாலேயே தறித்து அழிக்கப்படுவது கண்கூடு. எமக்குத் தெரிந்தவரையில் ஒரு பனை மரத்தை உண்டாக்குவதென்றால் நான்கு தலைமுறையாவது செல்லும். ஆதலால் பனைமரங்கள் தறிக்கப்படுவதை கண்டிப்பாக நிற்பாட்டுதல் வேண்டும். அத்துடன் புதிதாகப் பனை மரங்களை உண்டுபண்ணுவதற்கு விஞ்ஞானிகளின் ஆலோசனையுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தினதும், சமுதாய அமைப்பினதும் சின்னமாக நீண்ட காலமாகப் பனைமரம் திகழ்ந்து வருகின்றது. பெருவாரியாகத் தறித்து அழித்துக் கொண்டுபோகும் அளவிற்கு இல்லாவிட்டாலும் புதிதாக சிறிதளவாவது உண்டாக்கும் முயற்சிகள் இன்று இல்லை. இந்த நிலையினை நாம் வைத்துப் பார்க்கும்போது ஒரு காலத்தில் பனை மரங்களையே இங்கு காண்பது அரிதாகி பனம் பண்டங்களை வேறு இடங்களிலிருந்து பெறும் நிலையும் உருவாகுமோ என்று அஞ்சவேண்டியிருக்கின்றது.

இதே போன்று மா, பலா போன்றவற்றையும் நாம் வளர்த்தல் வேண்டும். இம்மரங்கள் கடந்த ஆண்டுகளாக வடபகுதியில் போதிய பயனை அளிக்கவில்லை என்பதையும் நாம் இங்கு மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

எனவே, பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு கூட்டு முயற்சியில் உழைக்க திடம் கொண்டுள்ள கூட்டுறவு இயக்கம் உப உணவுப் பயிர்களை மட்டுமன்றி இவ்வித பயன்தரு மரங்களையும் நவீன விஞ்ஞான முறையிலே பயன் படுத்தி எமது நாட்டின் வளத்திற்கு உதவ வேண்டும்

# கூட்டுறவே நம் கொள்கை

மன்னார் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் 1-1-75 8-5-75 வரை தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறவிருக்கும் மாணவ மன்றத்தினரால் 8-5-75 இரவு ஒரு பொதுக் கூட்டம் சிறப்பாக நடாத்தப்பட்டது.

செல்வன் அம்பிகைபாலன், செல்வன் சந்தாம் பிள்ளை அவர்களால் கூட்டுறவுக் கீதம் பாடப்பட்டது.

மாணவ மன்றத் தலைவர் திரு. M. C. M. தாஹீர் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கூட்டத்தில் கலாசாலை அதிபர் திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள் கூட்டுறவுக் கல்வியின் முக்கியத்துவத்தை இட்டு நீண்ட சொற்பொழிவு ஆற்றினார்.

தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்களான திரு. யோசப், திரு. சிவநாதன், திரு. இராசையா, திரு.குமாரவேல் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.

மன்ற அங்கத்தவரில் இருந்து செல்வன் அபுன்-உளா, செல்வன் எம். உசெயின் ஆகியோர் தங்கள் நான்கு மாத கூட்டுறவுப் பயிற்சியின் அனுபவங்களையிட்டு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

பொருளாதார விருத்தியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எமது நாடு கூட்டுறவுத் துறை மூலமே சுபீட்சமடைய முடியும். கூட்டுறவுக் கல்வியைப் பயின்ற மாணவர்கள் தங்கள் சங்கங்களில் நேர்மையுடனும் கடமையுணர்ச்சியுடனும் சேவை புரிய வேண்டுமென மன்னார் கூட்டுறவுஆணையாளர் சிறப்பான சொற்பொழிவு ஆற்றினார்.

கடைசியாக கலாசாலை மாணவ மன்றச் செயலாளர் திரு. பி. இராசசிங்கம் நன்றி தெரிவித்தார்.

கூட்ட முடிவில் இரவு விருந்து நடைபெற்றது.

## மாவட்ட செயலாளர்/கல்வி உதவியாளர்

## பதவி 111-ந் தரம்

தேவையான தகைமைகள்

1. வயதெல்லை 25 – 45க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பத்திரமும், கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரமும் அல்லது
3. பொருளியல், சமூக விஞ்ஞானம், முகாமை யியல், கணக்கியல் அல்லது ஏனைய வாணிப விடயங்களுடனுள பல்கலைக்கழகப்பட்டம் (கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திர தராதர முடையோர்மீது கவனம் செலுத்தப்படும்)

வேதனம்

$$\frac{\text{ரூபா } 275/- — 475/-}{10 \times 8 — 15 \times 8}$$

தகைமைகாண் காலம் இரண்டு வருடங்கள். பதவி யில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்பாக சபையினால் விதிக்கப்படுகின்ற ஒரு பாடத்தினை திறமையான முறையில் பூரணப்படுத்தல் வேண்டும் அல்லது ஒரு பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

மேலுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை 1975 ஜூன் மாதம் 25-ந் திகதி அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபாலில் எமக்குக் கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கவும்.. கடித உறையின் மேல் வலது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப் பிட வேண்டும்,

தலைவர்,

*கூட்டுறவு இல்லம்,
455, காலி வீதி,
கொழும்பு–3.
ஏ/*

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை

## சர்வதேச கூட்டுறவுத்தின விழா 1975

யாழ்-கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பிரிவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை சர்வதேசக் கூட்டுறவு தினவிழாவை இவ்வாண்டு ஜூலை மாதம் 5ம் திகதி சனிக்கிழமை கொண்டாடுவதற்கு ஒழுங்குகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

கூட்டுறவுக் கோட்பாடுகளை பொதுமக்களுடையேயும், விசேடமாக பாடசாலை மாணவர்களிடையேயும் பரவச் செய்யும் வண்ணமும், மக்கள் கூட்டுறவில் வைத்துள்ள நம்பிக்கையை வலியுறுத்தும் வண்ணமும், கட்டுரை. பேச்சு, கீதம், நாடகம், அட்டை வாக்கியம் புனைதல் முதலியவைகளில் போட்டிகளையும், கருத்தரங்குகள் பிரசாரக் கூட்டங்கள் கூட்டுறவாளர்கள் பவனிகள் ஆகியவற்றையும் இடம் பெறச் செய்வதுடன் இத்தினத்தன்று கூட்டுறவுக் கட்டிடங்கள், கூட்டுறவாளர் இல்லங்கள் யாவற்றிலும் கூட்டுறவுக் கொடிகளைப் பறக்கவிட்டு தீப அலங்காரம் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இத்தினத்தைப் பயனளிக்கும் வகையிலே கொண்டாடுவதற்கு ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழு தேவையான ஆலோசனைகளையும் ஆதரவையும் நல்க ஆயத்தமாக விருக்கிறது. இது தொடர்பாக கீழ் கூறப்படும் விடயங்களில் மாவட்ட ரீதியிலும், ப. நோ. கூ. சங்க தொழிற் பரப்பு ரீதியிலும் போட்டிகள் நடாத்தப்படலாம்.

### போட்டிகளின் விபரம்

ப. நோ. கூ. சங்கத் தொழிற்பரப்பு ரீதியில் நடாத்தப்படும் போட்டிகள். பேச்சு:- இப்போட்டி ப. நோ. கூ. சங்க தொழிற் பரப்பெல்லையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளாக நடாத்தப்படும். 14 வயதிற் குட்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவிலும். 14 வயதிற்கு மேற்பட்டவரும் 21 வயதிற்குட்பட்டவரும்

சிரேஷ்ட பிரிவிலும் பங்கு பற்றலாம்.

**கனிஷ்ட பிரிவு 5 நிமிடம்**

1. நான் பற்று வரவு செய்யும் கூட்டுறவுச் சங்கம்

**சிரேஷ்ட பிரிவு 7 நிமிடம்**

1. கூட்டுறவு இயக்கம் எவ்வாறு நாட்டின் அபிவிருத்திக்கு உதவலாம்.

போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர் கொடுக்கப்பட்ட விடயங்களை நன்கு ஆயத்தம் செய்வதுடன், தனியார் கட்டணமின்றி ஆக்க பூர்வமான விமர்சனங்களை வெளிப்படுத்தல் வரவேற்கப்படும்.

**கூட்டுறவுக் கீதம்**
**தனிப்பாடல்- 5 நிமிடம்**

கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளாக மாணவர்களுக்கு வேருகவும், மாணவிகளுக்கு வேருகவும் நடாத்தப்படலாம்

**கூட்டுப்பாடல் 7 நிமிடம்**

மாணவருக்கும், மாணவிகளுக்கும் வெவ்வேருக நடாத்தப்படலாம். ஒரு பாடசாலையிலிருந்து ஆண்கள் பிரிவுக் குழு ஒன்றும், பெண்கள் பிரிவுக்குழு ஒன்றும் மாத்திரம் பங்கு பற்றலாம். ஒவ்வொருகுழுவும் 5 பேருக்குக் குறையாமலும் 7 பேருக்குக் மேற்படாமலுமிருத்தல் வேண்டும்:

தனிப்பாடலிலும், கூட்டுப்பாடலிலும் கூட்டுறவுக் கருத்துக்கள் பிரதிபலித்தல் வேண்டும்.

**நாடகப் போட்டி நேரம் 1 மணித்தியாலம்**

இப்போட்டி கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடாத்தப்படலாம். கிளைகளையுடைய பெரியஆரம்ப சங்கங்கள் இப்போட்டியைக்கிளைகளுக்கிடையேநடார்த்தி, இதில் முதல் இடம் பெறும் நாடகக்குழு மாவட்டரீதியில் நடாத்தப்படும் இறுதிப் போட்டியில் பங்கு பற்றலாம்,

**வில்லுப்பாட்டுப் போட்டி நேரம் 30 நிமிடங்கள்**

இப்போட்டி கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடாத்தப்படலாம். பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் இப்போட்டியைக் கிளைகளுக்கிடையே நடாத்தி இதில் முதல் இடம் பெறும் வில்லுப்பாட்டுக்குழு, மாவட்ட ரீதியில் நடாத்தப்

படும் இறுதிப்போட்டியில் பங்கு பற்றலாம்.

மேற் கூறப்பட்டவை கூட்டுறவுக் கருத்தை அடிப் படையாகக் கொண்டிருத் தல் வேண்டும்.

### மாட்டு வண்டிப் போட்டி

இப்போட்டி மாவட்ட ரீதியில் நடாத்தப்படும். போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங் கத்திலிருந்தும் ஒரு இரட் டைமாட்டுவண்டி மட்டுமே அனுமதிக்கப்படும்.

### பொதுக் குறிப்புகள்

போட்டிகளில் பங்குபற் றுபவர்கள் அனைவரும் கூட் டுறவுச் சங்கங்களில் உறுப் பினர்களாயிருத்தல் வேண் டும். மாணவர்களாயின் அவர்கள் அல்லது அவர் களின் பெற்றோர்கள் கூட்டு றவுச் சங்க உறுப்பினர் களாயிருத்தல் வேண்டும்.

ப. நோ. கூ. சங்கங் களின் தொழில் பரப்பே போட்டிகள் நடாத்தப்படு வதற்குரிய எல்லையாக அமையும். இப்பகுதியில் தொழிலாற்றும் ஏனைய சங் கங்கள் போட்டியை நடாத் துவதற்கு அமைக்கப்பட்ட குழுவுடன் இணைந்து செய லாற்றுதல் விரும்பத்தக்கது. இவைகளுடைய பெரிய ஆரம்ப சங்கங்கள் இவ் வெல்லைக்குள் அடங்காததா யின் அத்தகைய சங்கங் களின் கிளைகள் இதனுடன் இணையலாம்.

போட்டிகளை நடாத்து வதற்கான அமைப்புக்குழு பின்வருமாறு அமைக்கப் படுதல் வேண்டும்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகளும், அத்தொ ழில் பரப்பில் கடமையாற் றும் கூட்டுறவுப் பரிசோத கர்களும்.

பேச்சு, கூட்டுறவுக் கீதம் நாடகம் வில்லுப் பாட்டு முதலிய போட்டி கள் யாழ் மாவட்டத்தி லுள்ள கூட்டுறவுச் சங்கங் களால் ஒழுங்கு செய்யப் படும். இப்போட்டியில்முதல் இடம் பெற்றவர்கள் ஸ்ரீ. ல. தே. கூ. சபை (யாழ்ப் பாணம்) சர்வதேசக் கூட் டுறவுத் தினவிழா சபையி னால் நடாத்தப்படும் இறு திப் போட்டிகளில் பங்கு பற்றலாம்.

கூட்டுறவுச் சங்க ரீதி யாக நடைபெறும் போட் டிகளை முன் கூட்டியே நடாத்தி அவைகளில் முதலி டம் பெற்றவர்களின் விப ரங்களை ஸ்ரீ. ல. தே. கூ. சபை, யாழ்ப்பாணம் செய லாளருக்கு 20-7-75 க்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

# மீன் பிடித்தொழில் சந்தை அபிவிருத்தி

**P. கோவிந்தசாமி**
கடற்றொழில் காரியாலயப் பரிசோதகர்

காலம் காலமாக கரையோரப் பகுதிகளைக் கொண்டுள்ள எல்லா நாடுகளிலும் மீன்பிடித் தொழிலுக்கு கந்த குளங்களும், ஆறுகளும் அமைந்துள்ள வேறு ஏனைய நாடுகளிலும் மீன் பிடித்தொழில் வாழ்க்கைத் தொழிலாக, பிழைப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. பிடிக்கப்படுகின்ற மீன்வகைகளும் அவற்றினை பிடிப்பதற்காகக் கையாளப்படும் முறைகளும் கரையோரத்துக் கரையோரம் வேறுபடுகின்றன. அதேபோன்று ஒருமுகப்படுத்தப்பட்ட அளவு, மீன் உற்பத்தி, கடன் வசதி, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றின் ஆராய்ச்சி, சிறப்புத் தேர்ச்சி போன்றவற்றிலும் வேறுபாடுண்டு.

மீனில் அதிகப் புரதச் சத்து உள்ளதால் அதற்கு அதிக கிராக்கியுண்டு, அது மேலும் ஊட்டம்மிக்க உணவாக இருப்பதினால் சகலரும் அதை விருப்புடன் நாடுகின்றனர். அதுமட்டும் இன்றி அது, உணவுக்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய போஷாக்கு நிரம்பிய உணவாகவும் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு எல்லா வகை மீன்களுக்கும் சந்தையில் அதிக கிராக்கி நிலவியபோதும் கடற்றொழிலாளர் சமூக ரீதியில் ஒதுக்கப்பட்டிருப்பதும் பெருத்த அவப்பேறாகும். உணவு உற்பத்தி செய்வோர்களை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டால் கடற்றொழிலாளர்களே மிக மோசமாக சுரண்டப்பட்ட ஒரு பகுதியினராகும். எத்தனையோ தத்துகளுக்கும் அபாயங்களுக்கும் மத்தியில் தொழில் செய்து கடலில் இருக்கும் செல்வத்தை கரை சேர்க்கும் இந்த மக்களை சூழ்ந்திருக்கும் சுரண்டல் வாதிகள் பலர்.

இலங்கையின் பண்டைக் கால வரலாற்றை நோக்கு

வோமாயின் மீன் அதிகளவு ஏற்றுமதி ஆகியது என்பதை நாம் அறிவோம். ஆயினும், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே விதிக்கப்பட்ட உப்பு வரியின் விளைவாக இவ் ஏற்றுமதித் தொழில் பாதிக்கப்பட்டது. பிடிக்கப்பட்ட மீன் கரை சேர்ந்ததும் அவ்விடங்களில் இருந்து நுகர்வோர் இருக்கும் இடங்களுக்கு விநியோகம் செய்யப்படுவதில் ஏற்படும் குறைபாடுகளும் தடைகளுமே கடற்றொழிலாளர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் மீன் பிடித்தல் முறைகளில் புதிய திருப்பங்களை ஏற்படுத்துவதிலும் பிரதான முட்டுக் கட்டையாக இருக்கின்றது.

இன்று கடற்றொழில் மக்களின் வாழ்க்கை நிலையை உடனடியாக ஒளிமயமாக்க வேண்டுமென்றால் சந்தைப்படுத்தல் முறைகள் தீவிரமாக சீர்படுத்துவதே இதற்கு பெரிதும் வழிகோலும். ஏனெனில் இதன் மூலம் கூடிய ஊதியத்தைப் பெறுவதோடு ஒரு சீரான பொருளாதார நிலையையும் அடைய முடியும்.

சந்தைப்படுத்துதல் என்பது பொருள் உற்பத்தியாளரிடமிருந்து பாவனையாளருக்கு எவ்வகையிலாவது சேரும் வகையிலான ஒன்றிணைக்கப்பட்ட இயக்க ஆற்றல் மிக்க ஒரு நிகழ்வாகும். "உற்பத்தியின் உச்ச நோக்கே சந்தைப்படுத்துதல் ஆகும்". பாவனையாளர்கள் மட்டும் அல்ல உற்பத்தியாளர்களும் தரகர்களினால் சுரண்டப்படுவது உற்பத்திக்கு அர்த்தமே இல்லாது போய்விடும்.

மீன் விரைவில் பழுதடையக்கூடிய ஒன்றானபடியினால் அப்பொருளைச்சந்தைப்படுத்துவதில் அதிக சிக்கல்கள் காணப்படுகின்றன.

பிடிக்கப்பட்ட மீன்வகைகளை வெளிச் சந்தையில் விற்பனவு செய்வதே கடற்றொழிலாள மக்கள் வழமையாக மேற்கொண்ட முறையாகும். இரண்டாம் மகா யுத்தத்தின் பின் சந்தைப் படுத்தல் மிக சிக்கல் வாய்ந்த தொழிலாகக் காணப்பட்டது. மீன் சந்தைப் படுத்துவதில் மட்டும் அல்ல விவசாய கைத்தொழில் பொருட்களைப் பொறுத்த மட்டிலும் அவ்வாறாகவே சிக்கல்கள் காணப் பட்டன.

அபிவிருத்தியடையும் பொருளாதார நாடுகளில் நாம் காண்கின்றது என்ன? ஏழைக் கடற்றொழிலாளர்கள் முதலாளி வர்க்கங்க

ளால் ஈவிரக்கமின்றி சுரண்டி வருகின்றதை காண்கின்றோம். இடை வியாபாரிக்கு கடற்றொழிலாள மக்கள் இன்று கடமைப்பட்டு அடிமையாகி வாழ்கின்றதையும் காண்கின்றோம். சிறு தொகை முற்பணத்தை பெறுவதுஎன்றால் என்ன? பெருந்தொகையை கடனாகப் பெறுவது என்றால் என்ன? இவர்கள் முதலாளிகளையே நாடுகின்றனர். முதலாளிகளும் மீன்பிடித் தொழில் செய்யும் காலம் ஆனால் என்ன இல்லா விட்டால் என்ன கடற்றொழிலாளர்களுக்கு உதவி நல்கின்றனர். குடும்பத்தில் சுகயீனம் மரணச் சடங்கு, திருமண வைபவம் அல்லது வேறு ஏதாவது குடும்ப கொண்டாட்டம் நடைபெற்றால் இவை யாவற்றிலும் கடற்றொழிலாளியின் இல்லத்தில் முதலாளி சமூகம் கொடுக்கத் தவறமாட்டான். சமயத்திற்கு ஏற்ப அவருடைய கண் கலங்கியிருக்கும் அல்லது உதட்டில் புன்னகை மலர்ந்திருக்கும். தேவைப்படும் பணத்தையும் தன் மடியில் கொண்டு வந்திருப்பார். இத்தகைய உதவிகள் மூலம் முதலாளி தொழிலாளியை தன்வசப்படுத்திக் கொள்கின்றான். எதிர்காலத்தைப்பற்றிப்பேசுவது இல்லை. இரு சாராருக்கும் இடையே எழுதப்படா ஒப்பந்தம் ஒன்று பொருந்தப் பட்டு இருக்கும், நான் பிடிக்கும் மீன் அத்தனையும் உமக்கு. நீர் நிர்ணயிக்கும் விலையில் தருவேன். இதுவே அடிமையின் நியதி ஆகும். இப்படிப்பட்ட கேவலமான செயல் மூலம் கடற்றொழிலாளர்கள் ஊனும் உடலுமாக இடை வியாபாரிகளுக்கு அடிமைப்பட்டு இருக்கின்றனர்.

கடற்றொழில் கூட்டுத்தாபனம் நிறுவப்பட முன்பு அமைக்கப்பட்ட கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கங்கள் கடற்றொழிலாளர்களை இத்தகைய விலங்கங்களிலிருந்து விடுவிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டன. கடற்றொழிலாளர்களை சமூக பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதே இச் சங்கங்களின் குறிக்கோளாக இருந்தது. ஆனால் இச்சங்கங்களை பொறுத்தளவில் பின்வரும் பிரச்சனைகள் இச் சங்கங்களை எதிர்நோக்கியிருந்தன.

(1) சிறிய நிறுவனமாக இருந்தபடியால் பொருளாதார ரீதியாக அவை ஒப்பேற முடியவில்லை.

(2) செம்மையான தலைமை அச் சங்கங்களுக்குக் கிட்டவில்லை.

(3) மிக குறுகிய அளவிலேயே விரிவாக்க வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

(4) புதிய உற்பத்தி முறைகளும், உத்திகளும் முற்ருக புரியப்படவுமில்லை உச்ச அளவுக்குப்பயன் படுத்தப்படவும்இல்லை

(5) சங்கங்களின் நோக்கங்கள் கூட பரந்த அளவில் உணரப்படவில்லை.

(6) தெளிவான சிந்தனைக்கு கடற்ருெழிலாளியின் கல்வி இன்மை முட்டுக் கட்டையாக இருந்தது.

(7) ஊதாரித்தனமான வாழ்க்கை முறையையும் தீயபழக்கவழக்கங்களையும் ஒழிப்பதற்கு அங்கத்தவர்கள் மத்தியில் திருத்த நடவடிக்கைகள் கையாளப்படவில்லை.

(8) சீரான முகாமையும்' கணக்கு வைக்கும் முறையும் நடைமுறையில் இருக்கவில்லை.

(9) சிக்கனத்தை வளர்க்கும் நோக்குடன் சேமிப்பு திட்டங்கள் அமைக்கப்பட்டு கையாளப்படவில்லை.

(10) காப்புறுதி திட்டங்களும் பொதுநல திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

(11) வியாபாரிகளின் எதிர்ப்பு சங்கத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தியது.

(12) சந்தைப் படுத்துதலுக்கு ஆகவேண்டிய வசதிகள் யாதொன்றும் கையாளப்பட வில்லை.

(13) கடற்ருெழில் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு விதிமுறைகள் சீராக இருக்கவில்லை.

(14) சந்தை ஆராய்ச்சி முறையோ அல்லது சந்தை விலைகளை அறிந்துகொள்வதற்கு ஒழுங்கு முறைகளோ இருக்கவில்லை.

இத்தகைய குறைபாட்டினுல் கடற்ருெழிலாளர்கள் சங்கங்களில் அங்கத்துவம் பெற்றிருந்த போதிலும் முதலாளிமாரிடமே தஞ்சம்புக நேரிட்டது. இதன் காரணமாக சங்கத்தின் மீதான நம்பிக்கை குன்றிப்போக ஆரம்பித்தது.

கடற்றொழிலதிபரிடம் இருந்து கடன்கள் ஒழுங்காக பெறப்பட்ட போதும் மேற் சுட்டிக் காட்டிய குறைபாடுகளினால் கடற்றொழிலாள உறுப்பினர்கள் சங்க மூலமாக இக்கடன்களை திருப்பிக் கட்டவோ அல்லது உற்பத்தியுடன் சந்தைப்படுத்தலையும் இணைந்து செயல்புரியவோ முடியாத நிலையில் திண்டாடினர். இதற்குரிய மனப்பக்குவமும் அவர்களிடம் நிலவவில்லை. மேற்கூறிய காரணங்களினால் சில சங்கங்கள் பிரதிகூலம் அடைந்தன. ஒரு சில சங்கங்கள் ஓரளவிற்கு இயங்கிய போதிலும் சந்தைப் படுத்தும் முயற்சியையோ அல்லது பலம் வாய்ந்த ஸ்தாபனங்களாக இயங்க முடியாத நிலையில் தொழில் புரிந்தன. சுருங்கக்கூறின் வெறும் கடன் வழங்கும் சங்கங்களாகவே இயங்கி வந்தன. ஆனால் பிடித்த மீன்களை வியாபாரியே கை பற்றிய வண்ணம் இருந்தான். இதனால் அரசாங்கத்தின் உதவியுடன் சங்கங்கள் வியாபாரியை செல்வந்தனாக்கினர்.

இக் கட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வேண்டிய உபகரணங்களை வழங்குவதற்கும் குளிர்சாதன வசதிகளை நல்குவதற்கும் குளிர் சாதன வசதிகள் அடங்கிய அமைப்பை முகத்துவாரத்தில் அமைத்துக் கொடுக்க இலங்கை கூட்டுறவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் முன்வந்தது. இச் சமாசம் அதே வேளையில் குளிர் ஊட்டப்பட்ட மீனை சந்தைபடுத்தும் ஒழுங்கு முறையையும் கையாண்டது. உடன் மீன் பல வருடங்களாக அருந்தியவர்கள் முதல் முதலாக குளிர் ஊட்டப்பட்ட மீன்களை அருந்தும் பழக்க வழக்கத்தை இச் சமாசமே கொழும்பு நகரத்தில் பரப்பியது.

1964-இல் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசாங்கத்தின் நிறுவனமொன்று அமைக்கப்படுவதின் அவசியம் உணரப்பட்டது. மீனை சந்தைப் படுத்துவதுடன், மீன்பிடித் துறைமுகங்கள் போன்ற அடித்தள அமைப்புக்கள் நிறுவும் பொறுப்புகளும் இந்த கடற்றொழில் கூட்டு ஸ்தாபனத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. முகத்துவாரத்தில் இருந்த சமாசத்தின் குளிர் சாதன வசதி அமைப்பு கட்டிடங்கள் முழுவதையும் இக்கூட்டுத்தாபனம் தன் சொந்தமாக்கியது.

இந்தக் கட்டத்தில் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்த சந்தைப்படுத்தும் வசதிகளையும் கையாளப்பட்ட முறைகளையும் அறிந்து கொள்வது பொருத்தமாகும். மீன்பிடிக்கப்படுவது முதல் அது நுகர்வோரை சென்றடையும் வரையிலே எத்தனையோ இடைவியாபாரிகள் இதில் சம்பந்தப்படுகிறார்கள். இதன் உண்மை நீங்கள் அறிந்ததே. இதனால் பாவனையாளரிடம் இருந்து மீனுக்கு ஆக பறிக்கப்படும் பணத்தில் மிகவும் குறைந்த ஒரு தொகையே மீன் பிடிப்பவருக்கு சேருகின்றது. மிகுதி முழுவதும் இடைவியாபாரிகளினால் உறிஞ்சப்படுகிறது. இடைவியாபாரியும் ஒரு சேவையை செய்கின்றான், ஆனால் அவன் செய்கின்ற சேவைக்கு அறவாக்கும் தரகு கூலி உற்பத்தியாளனையும் நுகர்வோரையும் பாதிக்கின்றது. அவன் உற்பத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் கொடுக்கும் பண உதவி ஒரு அபாயம் நிறைந்த கொடுக்கல் வாங்கல் என்று கூறி கொள்ளை இலாபத்தை உழைத்து விடுகிறான்.

சந்தைப்படுத்துவதில் உள்ள ஒரு முக்கிய பிரச்சினை என்னவென்றால் சொகுசுளை கையாளுதல், சிப்பம் கட்டுதல், குளிரூட்டுதல், ஐஸ்சின் வைத்தல், மொத்த வியாபாரம் செய்தல், ஏற்றுமதி சில்லறை வியாபாரம் செய்தல் ஆகிய பல்வேறு தொழிற்பாடுகளால் செலவினங்கள் அதிகரிக்கும், இச் செலவினங்களை சமாளிக்கவும் உற்பத்தியாளனுக்கு நல்லவிலையைக் கொடுத்து வாங்கவும் பாவனையாளனை பாதிக்காத முறையில் தரம் உள்ள பொருளை வழங்குவதுடன் நிதானமான விலைக்கு அதை வழங்குவதேசிறந்தசந்தைப் படுத்தல் முறையாகும்.

உற்பத்தியாளர்களை பொறுத்தளவில் அவர்கள் மீனை அல்லது மீன் பொருட்களை கரைக்குக் கொண்டுவந்ததும்உடனடியாக முழுவதையும்பொறுப்பு ஏற்கக் கூடிய ஸ்தாபனம் இடம் பெறுவதை அவர்கள் விரும்புவார்கள். உண்மையான சந்தைபடுத்தல் முறையொன்றை உருவாக்கினால் அது உற்பத்தியாளருடைய நன்மையைக் கருதி நேர்மையாகவும் அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய முறையாகவும் செயல் புரிவதே அவர்கள் விரும்புவார்கள்.

1971ம் ஆண்டு மீள மைப்பு செய்யப்பட்ட கடற் றெழிலாளர் கூட்டுறவு சங் கங்கள் இலங்கை தேசிய அபிவிருத்தி திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற் றுள்ளன. இலங்கையில் இருக்கும் 12 கரையோர மாவட்டங்களிலும் 45 சங் கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இச்சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் கூடிய அழுத் தம் செய்யப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின் இச்சங்கங் கள் கடன் வசதியையும் உற்பத்தியையும் சந்தைப்ப டுத்தலையும் ஒருங்கிணைக்கப் பட்டே செயல்புரிய முன் வந்துள்ளன. இச் சங்கங்க ளில் செம்மையான முகா மை, சீரான கணக்கு வைக் கும் முறைகள், செலவினங் களை கட்டுப்படுத்தும் பரி பாலன அமைப்பு முறைக ளும், இரு இலாகாக்களின் உதவியுடன் தகுந்த தீர்மா னங்கள் எடுப்பதற்கும், பொறுப்பு வாய்ந்த தலைவர் களின் உதவியுடனும் செ யல் புரிவதற்கு அரசாங்கத் தால் முக்கியத்துவம் கொ டுத்த ஸ்தாபனங்களாக விளங்குகின்றன.

இன்றையளவில் கடன் வசதிகளை அளித்து விட் டன. கடந்த 3 வருட காலத்துக்கு இடையே நால் மால் வினியோகம் உதிரிப் பாக வினியோகம், உப்பு போன்ற பொருட்களை பெற்று வழங்குதல் இடம் பெயர்ந்து தொழில் செய் யும் காலங்களில் விசேட அரிசி வினியோகம், அத்து டன் வள்ளத் தொழிற்சாலை கள், இயந்திரம் பழுதுபார்க் கும் தொழிற்சாலைகள், ஒரு சங்கம் கடல் அட்டை பத னிடும் தொழிற்சாலை ஒன் றும் சில பகுதிகளில் வீடு கட்டும் திட்டங்களும் அத் துடன் வாசிகசாலை வசதி களும் இதைவிட பொதுநல வசதிகளும் ஆரம்பித்து விட் டன.

சென்ற வருடத்தில் உடன் மீன் விற்பனவு செய் தலும் கருவாடு சந்தைப்ப டுத்தலும் அத்துடன் எரி பொருள் வழங்குவதிலும் சில சங்கங்கள் ஈடுபாடு உள் ளவையாக தொழில் புரிந் தன.

தீவிரமாக இச்சங்கங்கள் சந்தைப்படுத்தலில் இன்னும் இறங்கவில்லை. சந்தைபடுத் தல், கூட்டுறவு அடிப்படை யில் கடல் அட்டையை பொறுத்தளவில், மிகவும் உன்னதமான முறையில் நடைபெற்று வருகிறது, மூதற்கு இத்தொழிலில் ஈடு படும் சங்கங்களும் அச்சங்

கங்களின் இரண்டாம் மட்ட ஸ்தாபனமாகிய வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கடல் அட்டையையும், சங்கையும் கேள்விப் பத்திர அடிப்படையில், இலங்கைக்குப் பெரிதும் தேவையான செலாவாணியை உழைத்துக் கொடுப்பதற்கும் உற்பத்தியாளருக்கு நல்ல விலையை பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. கடலட்டையைப்பொறுத்தளவில்வேறு நாடுகளுடனும் இச் சமாசம் தொடர்புகொள்ள முயற்சி எடுத்து வருகிறது. மீனையோ கருவாட்டையோ பொறுத்தளவில் மீளமைப்பு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் தங்களுடைய இரண்டாம் மட்ட நிறுவனமாக தேசிய ரீதியில் இருக்கின்ற கடற்றொழில் கூட்டு ஸ்தாபனத்துடன் இணைந்து செயல்புரிய கடற்றொழில் கூட்டுத்தாபனம் இவ்வாண்டில் ஒரு முக்கிய திட்டத்தை வகுத்துள்ளது. இதற்கு ஆக அண்மையில் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட மீன் சந்தை தகுந்த காலத்தில் உற்பத்தியாளருக்கு பயனளிக்கக்கூடிய முறையாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்ட ரீதியாக கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு அச் சங்கங்கள் மூலம் மீனையும் கருவாட்டையும் சந்தைப்படுத்தத்திட்டம் தீட்டியாயிற்று. இதற்கு ஆன துரித நடபடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் பிடிக்கப்படும் மீன் தொகை ஒரு வருடத்தில் 87,000 தொன்கள் ஆகும். இதில் 3 சதவீத மட்டுமே மீன்பிடி கூட்டுத்தாபனமூலம் சந்தைப்படுத்தப்படுகிறது. இதில் இருந்து எவ்வளவுக்கு முன்னேறலாம் என்று உணர முடிகிறது.

1971-ம் ஆண்டு சேகரித்த புள்ளி விபரங்களுக்கு அமைய தலா மீன் நுகர்வு ஆண்டுக்கு 32 இறாத்தல் ஆகும். இன்றைய அளவில் இது பன்மடங்கு ஆக அதிகரித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் தனியார் துறையுடன் சித்திகரமாக போட்டியிடுவதற்கு கடற்றொழிற் கூட்டுத்தாபனமும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும் இணைந்து செயல்புரியவேண்டும்.

ஜப்பான், பேரு, ஜேர்மனி, ரஷ்சியா போன்ற நாடுகள் சந்தைப்படுத்தல்

உற்பத்தியுடன் இணைந்து மிகவும் சித்திகரமாக தொழில் புரிந்து வருகின்றனர். இலங்கையைப் பொறுத்தளவில் வெற்றிகரமாக செயல் புரிவதற்கு தற்போது உள்ள சூழ்நிலையை பார்க்கிலும் சிறந்த ஒரு சூழ்நிலை இடம் பெறப் போவதில்லை. இந்த அரசாங்கத்தின் கடற்றொழில் அபிவிருத்தி கொள்கையின் கீழ் கடற்றொழிலுக்கு என ஒரு தனி அமைச்சு இடம் பெற்றுள்ளது. கடற்றொழில் மக்களின் வளர்ச்சிக்காக வீடமைப்புத் திட்டங்கள், துறைமுகங்கள் கடற்றொழில் பகுதிகளுக்கு செல்கின்ற வீதிகள், கலங்கரை விளக்குகள் முதலிய வசதிகளை செய்து கொடுக்கும் இந்த வேளையில் பின் வருவனவற்றை ஆலோசனைகளாக நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். இவ் ஆலோசனைகளில் கூறப்பட்ட நடபடிக்கைகளை தீவிரமாக கையாண்டால் போஷாக்கு நிரம்பிய உணவாகிய மீனை பாவனையாளருக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் சந்தைக்கு அனுப்பி உற்பத்தியாளனையும் பாவனையாளனையும் பாதுகாக்க முடியும்.

(1) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இலங்கையிலுள்ள சகல கடற்றொழிலாளருடன் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மிக நெருங்கிய ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

(2) இதற்கு ஆன முதற்படியாக உறுப்பினர்கள் அதிகம் விரும்பும் மீன்பிடிஉபகரணங்கள் உதாரணமாக சூடைவலை, இறால் வலை போன்றவற்றை சங்கங்களுக்குத்துரிதமாகவும் போதியளவிலும் வழங்குதல் வேண்டும்.

(3) பிடிக்கின்ற மீன் முழுவதையும் அவை எங்கு இறக்கப்படுகின்றனவோ அங்கிருந்து அவற்றை கொள்வனவு செய்ய வேண்டும்

(4) விலை அமைப்புகள் நெகிழக் கூடியவையாக இருக்க வேண்டும்,

(5) இறங்கு துறைகளிலே குளிர்சாதனம் பொருந்திய சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

(6) பொருத்தமான வெவ்வேறு இடங்களிலோ

சங்கங்களினோ அல்லது கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உதவியுடனோ மீன் பதனிடும் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். (Curing yards)

(7) கொங்கொங் (Hong-kong) நோர்வே (Norway) டென்மார்க் (Denmark) போன்ற நாடுகளில் இருப்பது போல கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே மீன்களைக் கொள்வனவு செய்யலாம் என்று சட்டமூலம் வரையறை செய்ய வேண்டும்.

(8) சகல ஐஸ் (Ice) தொழிற்சாலைகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும். அத்துடன் ஆங்காங்கே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றை தங்களது பரிபாலனத்தின் கீழ் பொறுப்பேற்க வேண்டும்.

(9) இலங்கையிலே சில இடங்களில் இறங்கு துறைகள் மையப்படுத்தப்பட்டும் சில இடங்களில் சிதறுண்டும் இருக்கின்றன. சந்தைபடுத்தலை சிராக மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை தோறும் இறங்குத் துறைகள் மையப்படுத்தப்பட வேண்டும். (சிதறுண்டு கிடப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 74 இறங்குத் துறைகள் இருப்பதை உதாரணமாக கூறுகின்றேன்.)

(10) உடனடியாகமாகவட்டரீதியில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் தொழில் புரியும் எல்லா உத்தியோகத்தர்களும் உணரக்கூடிய முறையாகவும் அவர்களுடைய மனப்பான்மை மாறக்கூடிய முறையாகவும் கடற்றொழில் கூட்டுத்தாபன அதிகாரம் பெற்ற ஒருவர் அல்லது பலர் சுற்றறிக்கை மூலமாக தகவல்கள் கொடுக்க வேண்டும்.

(11) மீனுக்கு உத்தரவாத விலைத்திட்டமொன்று அமைக்கப்படுவதுடன் எல்லா அங்கத்தவர்களும் வியாபார ஒப்பந்தங்கள் சங்கத்துடன் செய்து கொள்ள வேண்டும்.

(12) ஒவ்வொரு சங்கமும் சந்தைபடுத்தும் உப சபைகளை நியமித்து

இத்தொழிலில் உடப டியாக திட்டமிட்டு இறங்க வேண்டும்.

சுருங்கக்கூறின் சந்தைப் படுத்துதல் என்பது நுகர்ச் சியாளரின் தேவைகளை அவர்களுக்கு வேண்டிய நேரத்தில் வழங்குவதே. பொருட்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்போது தான் நுகர்ச்சியாளர் அவற் றைப்பெற வேண்டிய நிர்ப் பந்தம் நிலவுமேயானால் அது சந்தைப்படுத்தவல்ல. மீன் சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் ஆண்டு தோறும் நுகர்ச்சியாளர் உண்ணக்கூடிய வகையில் பெறக் கூடியதாயிருக்க வேண்டும். இந்நோக்கினை எய்துவதென்ருல் நவீன உத்திகளான பதனிடுதல் 'ஐஸ்' போடுதல் குளிரூட் டுதல், சந்தைத் தகவல்களை அளித்தல் ஆகியவற்றைக் கையாளுதல் இன்றியமை யாதது. அரசாங்கம் எத் தனை இலட்சங்கள் உற்பத் திக்கு உதவும் மூகமாக மானிய அடிப்படையில் கடன் வசதி வழங்கினுலும் சந்தைப்படுத்துவதை திட்ட மிட்டு அமைத்து அரசாங் கத்தின் பிரதான கருவி யாக இருக்கின்ற கடற்ரெ ழில் கூட்டுத்தாபனம் தீவிர மாக பக்தி மனப்பான்மை யுடன் கூட்டுறவு சங்கங்க ளுடன் ஒத்துழைத்து செ யல் புரியாத பட்சத்தில் கடற்ரெழில் மக்களுடைய அபிலாஷைகள் நிறைவேற் றப்படமாட்டாது.

சந்தைப்படுத்தலுக்கு ஆக வேண்டிய சகல வசதி களையும் சொந்தமாக வைத் திருப்பது கடற்ரெழில் கூட் டுத்தாபனமே. வலை நூல் களை இறக்குமதி செய்கின்ற ஏகபோக உரிமை பெற்றி ருப்பது கூட்டுத்தாபனமே. ஏராளமான ஆள் பணியை வைத்திருப்பதும் கூட்டுத் தாபனமே. மனப்பான்மை மட்டும் மாறினுல் சந்தை படுத்தல் வெற்றிகரமாக கையாள முடியும். இதனுல் இலங்கையின் சமூக பொரு ளாதார அபிவிருத்திக்கு கடற்ரெழில் பெரும் பங்கை ஈட்டிய உண்மை வெளிப்படையாகும்.

இந்த உரையை நிகழ்த் துவதற்கு எனக்கு சந்தர்ப் பத்தை அளித்த இலங்கை மன்றக் கல்லூரி அதிகாரி களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைக் கூறுவ துடன் கடற்ரெழில் சங்கங் களின் வழிகாட்டிகளாக இங்கே பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கும் தங்களுக் கும் எனது நன்றிகளைக்கூற விரும்புகின்றேன்.

# ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்த அறிக்கை
## (1-1-1974—30-4-1975)

(முற்றொடர்)

6. இவ்வருடத்தினுள் இலங்கைக் கூட்டுறவாளர்களுக்கு வெளிநாட்டு கூட்டுறவுத் துறைகளை விமர்சிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. சுவீடன், இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பிரித்தானியா ஆகிய நாடுகளுக்குப் போய் இந் நாடுகளின் கூட்டுறவு நடவடிக்கைகள் பற்றி அறிய முடிந்தது.

சோவியத் ரஷ்யாவின் 'சென்றோசோயஸ்' நிறுவனத்தினால் தேசிய சபைக்குக் கிடைத்த பத்து மாதங்களுக்கான புலமைப் பரிசில் மூன்றிற்கு மூன்று பிரதிநிதிகளை அனுப்பியுள்ளோம். சர்வதேச கூட்டுறவு இணைப்பினாலும் புலமைப் பரிசில்களும், கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ்களும் கிடைத்ததுடன் அவற்றிற்கு எமது பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர் என்பதையும் அறிவித்துக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் எமக்குக் கிடைக்கின்ற புலமைப் பரிசில்கள் சர்வதேசக் கருத்தரங்குகளுக்கான அழைப்பிதழ்களுக்கு பிரதிநிதிகளை அனுப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானவர்களைக் கொண்ட ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான தகுதியானவர்களைத் தெரிவு செய்தல் சம்பந்தமாக பதில் அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவரும் அடங்கிய ஒரு குழுவினால் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுறவுச் சங்கம்

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் 5-4-1974 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைய, காப்புறுதிச் சங்கமொன்றை அமைத்தல் சம்பந்தமாக வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களின் அனுமதி கிடைத்துள்ளது.

ஒழுங்கான அடிப்படையில் இக் காப்புறுதிச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபையின் தலைவரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் மலேசியா காப்புறுதிச் சங்கம் சம்பந்தமாக பரிசிலனை செய்து இங்கு அடிப்படை வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட கூட்டுறவு காப்புறுதிப் சங்கத்தை நிறுவ கௌரவ வெளிநாட்டு, உள்நாட்டு அமைச்சர் அவர்களிடமிருந்து கிடைத்த உதவிகளைப் பாராட்டுவதுடன் எமது நன்றியையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கூட்டுறவுப் பொருட்காட்சி - கண்டி

25-5-1974 திகதி நடைபெற்ற தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய, தேசிய அடிப்படையிலான கூட்டுறவு வர்த்தகப் பொருட்காட்சி ஒன்று 28-7-1974 முதல் 4-8-1974 திகதி வரை கண்டி ஜோர்ஜ் ஈ.டீ. சில்வா மைதானத்தில் நடைபெற்றது. 1974ம் ஆண்டு சர்வதேசக் கூட்டுறவு தினத்தின் நிமித்தமும், கண்டி அசல பெரஹராவின் பொருட்டுமாக முதல் தேசிய கூட்டுறவுச் சபையினால் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் முழு ஆதரவுடனும் இப்பொருட்காட்சி மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இப் பொருட்காட்சியை வெற்றிகரமாகநடாத்தத் தெங்குப் பொருள் உற்பத்தியாளர்

கூட்டுறவுச்சங்கம், கூட்டுறவு விற்பனவுச்சங்கம், கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கம் உட்பட கூட்டுறவுச் சங்கங்களினுல் கிடைத்த உதவிகளைப் பெருமிதமாகப் பாராட்டுவதுடன், மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம், பீங்கான் கூட்டுத்தாபனம் ஆகிய வெளி நிறுவனங்களினுல் கிடைத்த உதவிகளையும் மறக்க முடியாதென்பதைக் குறிப்பிடுகின்ருேம். பொருட்காட்சியை ஒழுங்குபடுத்துதல், நடாத்துதல் என்பன சம்பந்தமாக கண்டி அரசாங்க அதிபர் உட்பட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து உதவிகள் கிடைத்திராவிடின் அவ்வாறுன தரமான ஒரு பொருட்காட்சியை நடாத்த முடியாதிருந்திருக்குமென்பதை இங்கு குறிப்பிட்டுக் கொள்கின்ருேம்.

## இப்பொருட்காட்சியின் நோக்கங்களும், அதிஷ்டங்களும்

1. அரசாங்கத்தின் ஐந்து வருட திட்டத்தின்கீழ் இலங்கை கூட்டுறவுத் துறையை புனரமைத்ததன் பின்பு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும். அதன்மூலம் தேசிய அபிவிருத்திக்குஏற்பட்டுள்ள சேவைகளையும் விபரித்துக் காட்டுதல்.
2. கூட்டுறவு சம்பந்தமாக பரந்த ஒரு வழியை மக்களுக்கு ஏற்படுத்துதல்.
3. கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு பரந்த அடிப்படையில் விளம்பரத்தைப் பெற்றுக் கொடுத்தலும் அவ்வுற்பத்திப் பொருட்களை சாதாரண விலைக்கு மக்கள் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுத்தலும்.
4. அரச திணைக்களங்களினுலும், கூட்டுறவுத்துறைக்குக் கிடைக்கின்ற ஆதரவுகளையும், அவற்றிடையே உள்ள இணைப்பையும் பிரதிபலித்தல்.
5. இலட்சக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகளுக்கு கூட்டுறவு சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொடுக்க வசதியளித்தல்.

இப்பொருட்காட்சி கண்டி பெரஹராவின்போது நடைபெற்றதினுல் பத்து இலட்சத்திற்கு அதிகமான மக்கள் இதனைப்பார்வையிட்ட

துடன். கூட்டுறவு உற்பத்திப் பொருட்களை அவர்களுக்கு சாதாரண விலையில் பெற்றுக்கொள்ள முடிந்தது. இப்பொருட்காட்சியின்போது மிக அதிகமான அளவில் கூட்டுறவுச் சங்க உற்பத்திகள் விலைப்பட்டன. பொருட்காட்சி முடிவடைகின்ற தறுவாயில் பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்தமையால் சில சங்கங்களுக்கு விற்பனைக்குப் போதுமான அளவு பொருட்களைக் கூட விநியோகிக்க முடியவில்லை. பொருட்காட்சியில் பங்கு பற்றிய சங்கங்களுக்கிடையே ஒரு போட்டி நடாத்தப்பட்டதுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுள் முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே குருநாகல், மாத்தளை சங்கங்கள் இரண்டும், நுவரெலியா, குளியாப்பிட்டி சங்கங்களும் பெற்றுக்கொண்டன. சிறந்த கூட்டுறவு நிறுவனமாக கொழும்புச்சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. சிறந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகபண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தெரிவாயிது. கண்கவர் கூட்டுறவுப் பொருட்காட்சிச் சாலையாக சம்பந்தப்பட்ட பலநோக்குச் சங்கச்சாலையும், சிறந்த கைத்தொழிற் சங்கமாக அகில இலங்கை கைத்திறன் கலைஞர்களின் கூட்டுறவுச் சங்கமும், சிறந்த நெசவாளர் சங்கமாக கண்டி மாவட்ட நெசவாளர் சங்கமும், சிறந்த தலைமைச் சங்கமாக தென்னம்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும் பரிசில்களைப் பெற்றுக்கொண்டன.

இவ்வாறான பொருட்காட்சி 24-9-1974 முதல் 27-9-1974 வரை காலியிலும் நடைபெற்றது. முக்கியமாக இதனை இத்துறையின் முன்னேற்றத்தைபிரதிபலிப்பதற்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்தது.

### கூட்டுறவுக் கல்வி நிலையங்களின் கட்டிடங்களும் அவற்றின் கண்காணிப்பும்

கூட்டுறவு கல்வி நிலையங்களின் கட்டிடங்களைக் கண்காணிப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பணிப்பாளர் சபை மூலம் உபகுழு ஒன்று நியமனம் பெற்றுள்ளது. இக்காலவரையினுள் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, காலி, மாத்தளை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டக் கட்டடங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூபா 26,4=6,25 செலவிடப்பட்

டுள்ளதுடன், வவுனியா மாவட்டக் காரியாலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக அரசாங்க பகிரங்க வேலைத் திணைக்களத்திலிருந்து மதிப்பீடு கேட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டக் காரியாலயத்தையும், கல்வி நிலையத்தையும் கொண்டு நடாத்த கட்டடத்துடன் கூடிய ஒரு காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மக்கள் வங்கிப் பங்கு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 4,00000.00 ரூபா பெறுமதியான மக்கள் வங்கியின் பங்குகளை ஸ்ரீ லங்கா தேசியக் கூட்டுறவுச் சபை பெற்றுக்கொண்டுள்ளது.

## ஏனைய விடயங்கள்

### 1. கூட்டுறவுப் பிரசுரங்கள்

அ. சென்ற வருடத்திலும் கிழமைக்கு ஒரு முறை கூட்டுறவுப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டது. ஒரு தடவையில் 3500 பத்திரிகை பிரசுரிக்கப்படுவதுடன் இக்கால வரையறையினுள் 600 பேர் சந்தாக்காரராகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றிற்கு மேலதிகமாகக் கூட்டுறவுத்திணைக்களம், கல்வித் திணைக்களம், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றிற்கு 2075 பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன.

ஆ. மாதமொருமுறை பிரசுரிக்கப்படுகின்ற 'ஐக்கியதீபம்' பத்திரிகையில் 1500 பிரதிகள் விற்பனையாகின்றன.

இ. ஆவிட்சன், தண்டபாணி என்பவர்களினால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஈ. சுமணசேகரா பண்டார அவர்களினால் எழுதப்பட்டுள்ள 'கூட்டுறவு' என்ற புத்தகம் இப்பொழுது பிரசுரத்தில் உள்ளதுடன் இன்னும் சில நாட்களில் அது வெளியீடு செய்யப்படும்.

உ. 'கூட்டுறவு விளக்கம்' என்ற சஞ்சிகையை மீண்டும் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதுடன் அடுத்த வருடத்தில் அது பிரசுரமாகும்.

## திரைப்படப் பிரிவு

அறிக்கை சமர்ப்பிக்கின்ற ஆண்டிற்குள் இரத்தினபுரி,

கண்டி, மாத்தறை, கொழும்பு, மாத்தளை, சிலாபம், புத்தளம், குருநாகல், கம்பஹா, மேல்ஊவா குளியாப்பிட்டி, அநுராதபுரம், களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 95 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 15 கடன் கொடுப்போர் சங்கங்களிலும், 16 கூட்டுறவுக் கிராம சங்கங்களிலும், ஏனைய கூட்டுறவுச்சங்கங்களிலும் 126 திரைப்படக் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. இப்படக்காட்சிகளை 60,000 அளவு மக்கள் பார்த்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்ட ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள், தேவைகளுக்கேற்ப எதிர்வரும் வருடத்தில் ஒழுங்கான முறையில் 24 மாவட்டங்களிலும் படக்காட்சிகளை காண்பிப்பதற்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது இது சம்பந்தமாக கூட்டுறவுத் துறையுடன் சரிசமமாக முன்னேறுகின்ற மக்கள் வங்கி, விவசாய திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கூட்டுறவுத்துறை மூலம் கிராம விவசாயிகளினதும், நகர தொழிலாளர்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் சம்பந்தமாக கூட்டுறவுத்துறையின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் பற்றி அம்மக்களுக்கு புலப்படுத்துதல் எமது திரைப்படப் பிரிவின் நோக்கமாகும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

கூட்டுறவுத் திணைக்களத்தினதும் உதவியுடன் எமது சபை 'சஹன் எலிய' என்ற கூட்டுறவுத் திரைப்படத்தைத் தயாரித்துள்ளது. இப்படம் மிக விரைவில் எமது திரைப்படம் பிரிவினால் திரையிடப்படும்.

### 3. வாக்களிப்புப் பத்திரங்கள்

70 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் பிரதேசநிருவாக சபைகளை அமைத்துக்கொள்ளத் தேவையான வாக்களிப்புப் பத்திரங்களும், ஏனைய பத்திரங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பத்திரங்கள் சங்கங்களினால் மேலும் கேட்கப்பட்டுள்ளமையால் அவற்றைப் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### தினக்குறிப்புப் புத்தகம்

இவ்வருடத்திலும் கூட்டுறவாளர்களின் பிரயோச

ணத்திற்காக 3500 கூட்டுறவு தினக்குறிப்புப் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன, பிரசுர செலவு அதிகரிப்பின் விளைவாக இம்முறை தினக்குறிப்புப்புத்தகத்தை அலங்காரமானமுறையில் பிரசுரிக்க முடியவில்லை. எதிர் காலத்தில் சிறந்த அலங்காரமானமுறையில் ஒரு தினக்குறிப்புப் புத்தகத்தைப் பிரசுரிப்பதுபற்றி ஒழுங்குகள் செய்யப் பணிப்பாளர் சபையினால் ஒரு உபகமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வருடத்திற்குரிய தினக்குறிப்புப் புத்தகம் அலங்காரமான முறையில் அமையாதமைபற்றி எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட நிருவாக சபைகளினால் கிடைக்கப்பெற்ற பிரேரணைகளை நடைமுறைப்படுத்தல்

25-5-1974 திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட சபைகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகள், இக்கால வரையறையினுள் எமது பணிப்பாளர் சபையினதும், ஆலோசனை சபையினதும் கவனத்திற்குப் பாத்திரமானதுடன் அவற்றுள் பெரும்பாலானவை நடைமுறைப்படுத்தப் பட்டனவென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இவற்றிற்கு மேலதிகமாக மாவட்ட நிருவாக சபைகளினாலும், அங்கத்துவ சங்கங்களினாலும் இடையிடையே கிடைத்த பிரேரணைகளையும், கருத்துக்களையும் நாம் மிக விருப்பத்துடன் பொறுப்பேற்பது பற்றிக் கவனம் தெரிவித்துக்கொள்வதுடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதுபற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதையும் தயவாய் தெரிவித்துக்கொள்கின்றோம். எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரேரணைகள் சில கீழ் வருமாறு:

1. கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ரக்டர் ரயர், அதன் உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்வதில் தட்டுப்பாடு நிலவுவதினால் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ரக்டர் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்துள்ளதுடன் எமதுவேண்டுகோளுக்கு முதலிடமளிப்பதாக கூட்டுத்தாபனம்எமக்கு அறிவித்துள்ளது.

2. துவிச்சக்கர வண்டி ரயர், ரியூப், உதிரிப் பாகங்களின் விற்பனையை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பெற்று சங்கங்களினூடாக அவற்றின் விநியோகத்தை நடாத்தும் பொருட்டு எம்மால் கேட்கப்பட்டதன்பேரில், துவிச்சக்கரவண்டி ரயர், ரியூப் வியாபாரத்தையும், பங்கீட்டினையும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் எடுத்துள்ளதுடன் சங்கங்களுக்கு விற்பனைக்காக அவை வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களின் தொகைபற்றி நாம் திருப்தியடையாததால் இது சம்பந்தமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் கவனத்தை வேண்டியுள்ளோம்.

3. சென்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு கடன்கொடுப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் சங்கமொன்றை நிறுவ, சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளமை பற்றிக் குறிப்பிடுவதுடன், அதன் 'யாப்பு' கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளனவற்றையும், அனுமதி கிடைத்ததும் சங்கத்தை நிறுவ உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

4. கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்படுகின்ற வெற்றுச் சாக்குப் பைகள், வெற்றுப் பாத்திரங்கள் என்பனவற்றை சந்தைப்படுத்த ஒரு தலைமைச்சங்கம் நிறுவப்பட வேண்டுமென எம்மால் பிரேரிக்கப்பட்ட போதும், சாக்குப் பைகளின் விற்பனைக்காக அரசாங்கத்தினால் சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம் நியமிக்கப்பட்டுள்ளது. சங்கங்களின் வெற்றுச் சாக்குப் பைகளுக்கு கூட்டுத்தாபனம் சரியான விலை கொடுக்காததினால் இது சம்பந்தமாக வெளிநாட்டு, உள்நாட்டு அமைச்சர் அவர்களுக்கு அறிவித்

நதன் பேரில் வெற்றுச் சாக்குப் பைகளுக்கான சரியான விலையைத் தீர்மானம் செய்வதற்குத் தேசிய அரசுப்பேரவையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்த உறுப்பினர்கள் மூவரும், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மூவர் என்பதை இங்கு விசேடமாகக் குறிப்பிடுகின்றோம்.

5. கூட்டுறவுத் துறை உல்லாசப் பிரயாணசேவையை ஆரம்பிப்பது சம்பந்தமான திட்டமொன்றை அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தலை 1975 வரை நிறுத்தி வைக்க வேண்டுமென்பது அமைச்சின் அபிப்பிராயமாகும். எனினும் தாமதியாது உல்லாசப் பிரயாண சேவைத் திட்டமொன்றை மேற்கொள்வது சம்பந்தமாக கூட்டுறவு முகாமையாளர் சேவை நிலையத்திடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

6. கூட்டுறவு மாவட்ட சங்க காலத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு மேல் பதில் செயலாளர்களாக விளங்கிய மாவட்ட செயலாளர்களுக்கு நிரந்தர நிலை விளங்கப்பட்டுள்ளமை பற்றி மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், 3ம் தர கல்வி உதவியாளர் நியமனம் சம்பந்தமான தகைமைகளைத் திருத்துமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளமை பற்றியும்குறிப்பிடுகின்றோம்.

7. தலைமைச் சங்கங்களுள் ஒன்றான மட்டுப்படுத்தப்பட்ட கைத்தொழில் சங்கம், தீவின் பல பகுதிகளிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கைத்தொழிற் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட உதவி செய்யப்பட வேண்டுமெனவும், அத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள் விநியோகம், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் தொழிற்நுட்ப ஆலோசனை வழங்குதல் சம்பந்தமாக நாம் விசாரணை

மேற்கொண்டதுடன், சகல கைத்தொழிற் சங்கங்களும் அங்கத்துவம் பெறும்வகையில் கைத்தொழிற் சங்கத்தைப் புனர் நிர்மாணம் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, கைத்தொழில் சங்கத்தின் ஆதனங்கள் திறமையின் அளவு என்பன அடிப்படையில் சந்தைப்படுத்துதல், ஆலோசனைகள் சம்பந்தமாக கவனமெடுப்பதாகவும் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

8. மாவட்டங்களில் ஒன்றுசேருகின்ற பணத்தில் $2\frac{1}{2}\%$ மாவட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளதோடு இதில் அவரது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

9. மாவட்ட நிருவாக சபைகளினால் எடுத்துக் காட்டப்பட்டவாறு தேசிய சபைக்கு அச்சகம் ஒன்று இல்லாமை ஒரு பெரும் குறைபாடெனக் கருதிய பணிப்பாளர் சபை 'தவச' திருவனத்தை சுவீகரிப்பதன் மூலம் இப்படியான ஒரு அச்சகமொன்றை ஏற்படுத்தலாமெனக் கருதுவதினால், இம்முறை பொதுக் கூட்டத்திற்கு இப்பிரேரணையைச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளது.

10. பெருமளவில் இலாபம் சம்பாதிக்கக் கூடியதுன் ஒன்றானதும், தற்பொழுது தனியாரால் மாத்திரம் நடாத்தப்படுவதுமான 'சிகரெட்' விநியோகம் செய்யும் விநியோக உரிமையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கை புகையிலைக் கம்பனியிடம் கேட்கப்பட்டதன் பேரில், தற்பொழுதுள்ள விநியோக உரிமைகளை இரத்துச் செய்து, புதிய விநியோக உரிமை வழங்கப்படும்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில சங்கங்களுக்கு இவ்

வுரிமை கிடைத்துள்ள தாகவும் தெரிகின்றது.

11. கடதாசிப் பற்றாக் குறையினால் சங்கங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளமையினால் கடதாசி விநியோகத் தின் போது கூட்டுற வுச் சங்கங்களின் தே வைகளுக்கு முக்கியத் துவம் வழங்குமாறு கிழக்கிலங்கை கடதா சிக் கூட்டுத்தாபனத் திடம் கேட்கப்பட்ட தன் பலனாக கூட்டுத் தாபனத்திடம் போதி யளவு கடதாசி இருப்பு இல்லாதிருந்த போதி லும், கூட்டுறவுச் சங் கங்களின் தேவைகளை நிறைவேற்ற கூட்டுத் தாபனம் பெருமுயற்சி எடுத்துள்ளது. மேலும் சங்கங்களுக்குத்தேவை யான கடதாசி பயிற் சிப் புத்தகங்களுக்காக இராக்கப்பணம் செ லுத்துவதற்குப் பதி லாக காசோலை ஒன் றினால் பணம் செலுத்த ஒழுங்குகள் செய்யு மாறு கேட்டதற்கு கூட்டுத்தாபனம் அதற் கு இணங்கியதென்ப தையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் ளுகின்றோம்.

12. அரச நிறுவனங்களின தும், தனியார் நிறு வனங்களினதும் உற் பத்திப் பொருள்களை விசேடமாக அத்தியா வசியப் பொருள்களை அரசாங்க கூட்டுறவு மொத்த விற்பனை நிறு வனம், சலுசலா, சந் தைப்படுத்தல் சம்மே ளனம் என்பனவற் றின் மூலம் விநியோ கிப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வெளி நாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதன் பேரில் படிப்படியாக அரசாங்க நிறுவனங் கள், அரசாங்க ஒத்து ழைப்புடனான நிறுவ னங்கள், பிரதேச கைத்தொழிற் சங்கங் கள் என்பனவற்றின் உற்பத்திகள் கூட்டுறவு மொத்த விற்பனை நிறு வனம், சலுசலா, விற் பனைச் சங்கம் என்பன வற்றின் மூலம் மாத் திரம் விநியோகிக்கப் பட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக எமக்குத் தெரிகின்றது.

13. கூட்டுறவுத் துறை பொது மக்களால் வெ றுக்கப்படாமல் இருக்க

மோசடிகளை இல்லாமல் செய்வதற்காக சொத்துக்களை அரசுடைமையாக்குதல் ஆகிய கடுமையான தண்டனைகளை உள்ளடக்கிய வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்ற உங்களது பிரேரணைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்ததன் பேரில், கூட்டுறவைப் பாதுகாக்கவும், அதன் முன்னேற்றத்திற்கும் பல சட்டரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது இரகசியமானதல்ல.

14. 'சலுசலா' நிறுவனத்தினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற புடவையின் அளவு போதாதெனவும், அதனால் வாடிக்கையாளர் பெருமளவு அதிருப்திப்பட்டுள்ளனர் என்பது அறிவிக்கப்பட்டதன் பேரில், 'சலுசலா' கூடுதலான அளவு புடவைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளது. இதற்கு மேலாக எமது அங்கத்துவ நெசவாளர் சங்கங்களின் உற்பத்திகளை 'சலுசலா' கொள்வனவு செய்து அதன் மூலம் நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

15. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கின்ற பண்டங்களை விற்பனை செய்வதன் மூலம் மாத்திரம் இன்று அவற்றை நடாத்த முடியாமல் இருப்பதால், தனியார் துறைக்கு கொடுக்கப்பட்டுள்ள பெற்றோலியம், மண்ணெண்ணை விநியோகத்தை இச்சங்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களுக்கு விளக்கியதன் பலனாக தற்பொழுதே அநேக சங்கங்களுக்கு இப்பொருட்களின் விநியோக உரிமை வழங்கப்பட்டுள்ளதென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

16. பசளை, மா ஆகிய பண்டங்களை கூட்டுறவுச்

சங்கங்களுக்கு விநியோ கிக்கும் போது சாக்குப் பை கழிவிற்குப் பதிலாக, நியாயமான கழிவு வழங் கப்பட வேண்டுமென அறிவிக் கப்படதன் பேரில் அது சம்பந்தமாக நடவடிக் கை எடுக்கப்பட்டுள் ளமை பற்றியும் அறி வித்துக் கொள்கின் றோம்.

## எமது நன்றி

ஸ்ரீலங்கா தேசியக் கூட் டுறவுச் சபையின் கடமை களை நிறைவேற்றுவதிலும், எமது மகாநாடுகள், கருத் தரங்குகள் என்பனவற்றில் கலந்து கொண்டும் எமக்கு பேருதவிகள் புரிந்த கௌ ரவ உள்நாட்டு, வெளி நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களுக்கும், பதில் அமைச்சர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

மேலும், வர்த்தக அமைச் சரின் செயலாளர் உட்பட சகல உத்தியோகத்தர் களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களும், பதில் ஆணையாளர் அவர் கள், சகல உதவி ஆணை யாளர்கள், கூட்டுறவு அபி விருத்தித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர் யா வரும் தேசிய கூட்டுறவுச் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வழங் கிய ஆதரவை பெரிதாகக் கருதுவதுடன் அவற்றிற்கு நன்றியறிதலையும்செலுத்து கின்றோம்.

கூட்டுறவு மொத்த விற் பனவு நிறுவனம், மக்கள் வங்கி என்பனவற்றுடன் எம்முடன் மிக நெருங்கி ஒத்துழைத்த ஏனைய சகல நிறுவனங்களுக்கும், அவற் றின் உத்தியோகத்தவர்க ளுக்கும் எமது நன்றி உரித் தாகுக.

ஏனைய உலக நாட்டு மக் களுடன் ஒன்று சேர்ந்து கடமை புரிய எமக்கு சந் தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த சர்வதேசக் கூட்டுறவு இணைப்பிற்கும், எமது கூட் டுறவாளர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கிய வெளி நாட்டினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

எமது தேசிய கூட்டுற வுச் சபையின் பிரதான காரியாலயத்திலும், மாவட் டக் காரியாலயங்களிலும் கடமை புரிகின்ற உத்தி

யோகத்தர்களுக்கும், பணிப்பாளர் சபைக்கும், மாவட்ட நிருவாக சபை அங்கத்தவர்களுக்கும் கடமைகளை நிறைவேற்றுவதில் செய்த உதவிக்கும், ஒத்தாசைகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

## எமது நோக்கம்

இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட்டுறவுத் துறையினால் நல்லதொரு சேவையை வழங்க அவசியமான கல்வி வசதிகளை சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்குவதையும், கூட்டுறவுத் துறையின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் கூட்டுறவாளர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி பெறச் செய்தலையும், கிராமிய, நகர மக்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொடுத்தலையும் நோக்கங்களாகக் கொண்டு நாம் கடமை புரிகின்றோம்.

எதிர் காலத்தில் விவசாயக் கைத்தொழில் உற்பத்தியை பெருக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அரசாங்கத்தின் கொள்கையுடன் ஒத்து கூட்டுறவு குடியிருப்புக்கள், கூட்டுறவு கிராமிய சங்கங்களை எழுச்சி பெறச் செய்யவும், அரசாங்கத்தின் உற்பத்திப் போரிற்கு கூட்டுறவுத் துறையின் முழு ஆதரவினையும் பெற்றுக் கொடுக்கவும் ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

'கூட்டுறவு' பத்திரிகை மூலமும், திரைப்படப்பிரிவு உட்பட மாவட்டக் காரியாலயங்களின் விரிவுரையாளர்கள் மூலமும், இலங்கை கூட்டுறவுத் துறையை சீரான முறையில் ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்வதும், பாதுகாப்பதும் எமது நோக்கமாகும்.

ஜே. எஸ். எம். டி. சில்வா
(பொதுச் செயலாளர்)
11-5-1975.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

நாடகம், நடனம்

| | | |
|---|---|---|
| இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | | 350-00 |
| பகல் | .. .. | 200-00 |

இசை நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| இரவு | .. .. | 175-00 |
| பகல் | .. .. | 150-00 |

ஏனைய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |

திருமணம் – பகல் அல்லது இரவு

| | |
|---|---|
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |

| | | |
|---|---|---|
| சினிமா | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி
7236


Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.